விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்

அழகிய ஆரம்பம்

2025 Octoberr 1-15

இன்று

ஈ இதழ்

அப்பா சிறப்பிதழ்



தாயுமானவர்

அப்பாவின் நினைவு தினம்
என்ற ஒன்றிருந்தாலும்
அப்பாவை நினைக்காமல்
ஒரு நாளும்
என்னைக் கடந்து சென்றதில்லை!
அப்பா வெறும் வார்த்தை அல்ல
என் வாழ்க்கை!

அப்பா நைனா டாடி டாட்
என விதவிதமாக
ஆசையுடன் அழைத்திருந்தாலும்
அவரே என்றும் எனக்குத்
தாயுமானவர்!



முத்து ஆனந்த்
வேலூர் ✆7010482479

அனைவருக்கும்
வணக்கம்.

அடுத்த இதழ்
இன்று-விற்கு

தலை தீபாவளி

ஸ்பெசல்...
படைப்புகளை
அனுப்புங்கள்.... கண்
கவர் பரிசுகளை
வெல்லுங்கள்...

வெ.கோபிநாத், ஆசிரியர்.

இணையவழி மோசடிக்கு
பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

YouTube
@indhrudotin

புதுக் கவிதை



முத்து ஆனந்த்
வேலூர் 7010482479

சிங்காரி

நீ
இன்ப அதிர்ச்சியாக
சில நேரங்களில்
பாவாடை தாவணி
அணிந்து வருகிறாய்!
அப்பொழுதெல்லாம்
உன்
அழகில்
குளிக்க ஆரம்பித்து
விடுகிறது
என்
மனம்!

களவாணி(யே!)

என்
உள்ளம் கவர்ந்த கள்வி
நீ!
ஆனால்
ஒவ்வொரு முறை
சந்திக்க வரும் போதும்
என்
கன்னம் கிள்ளிக்
களவாணி என்று
கொஞ்சுகிறாய்!

எப்படியடி?!

அதெப்படியடி?!
உன்
புன்னகைகளில் மட்டும்
எப்பொழுதும்
அழகழகான
கவிதைகள்
உட்கார்ந்திருக்கிறது!

குழம்பி

எரிப்பது போல் முறைக்கிறாய்!
உன்அனல் பார்வையில்
குழம்பி தயாரித்துக் குடிக்கிறது என் மனம்!

நௌஷாத் கவிதைகள்

வயிற்றுக்காக உழைத்த வரை
அன்பை சுவாசித்தோம்
வசதிக்காக உழைத்தவுடன் ஆணவம்
சுமந்தோம் !

மரணத்தை அதிகமாய் நேசிக்கிறேன்
என்னை சுற்றி சாத்தான்களும்
சூன்யமான வாழ்க்கை
நரகமாய் இருப்பதாலும்!

கட்டிலில் களங்கப்படுவதுமில்லை
கல்யாணத்தில்
முற்றுப் பெறுவதுமில்லை
"உண்மைக் காதல்"

என்னடி
செய்தாய் ?
மண்டை மூளையெல்லாம்
பித்தம் பிடித்திருக்கிறது உன் நினைவுகளாய் !

கோயிலெல்லாம் செல்லாதே
நீ அருகே இருக்கும் போது
கடவுள் எதுவென்று தெரியவில்லை!

சில உறவுகள் அன்பாய் பழகும்
உன் முதுகுக்கு பின்னே
விஷத்தை விதைக்கும்
காலம் கனியும்
பசு வேடம் போட்ட
நரியின் வேஷம் ஒருநாள்
குருட்டு கண்களுக்கும் புலப்படும்.



-லி.நௌஷாத் கான்-
✆ 971 56 109 3550

7094053241 indhrumail@gmail.com

மினி கதை

[அ]சைவம்

நோய் வாய்ப்பட்டிருக்கும் தன் அப்பாவைக் காப்பாற்ற வேறுவழியின்றி சிக்கன், மட்டன் ஆகியவற்றை அறுத்து, துண்டு துண்டாய் வெட்டும் வேலையில் சேர்ந்தான் சுத்த சைவமான சுப்பிரமணி!



மலர்மதி 8667417874

ஹைக்கூ

கொட்டும் மழையில்
நனையும் குழந்தை
மனதில் மகிழ்ச்சியின் ஈரம்.

விளையாடும் சிறுவர்களின்
பசியைத் தூண்டுகிறது
வலையில் சிக்கிய மீன்.

உப்பில்லை உரப்புமில்லை
ஆனாலும் ருசிக்கிறது
குழந்தைகள் ஆக்கிய
கூட்டாஞ்சோறு.



ச.கோபிநாத்
சேலம்
84382 56235

ஒவ்வொரு ரோஜாவும்
அழகாகப் பூக்கின்றன அதனதன்
முட்களுடன்!
==========
அழுகையும் சிரிப்பும்
கலந்த அழகிய வானவில்
காதலி!!
==========
உன் நினைவுகளை மீட்டும்
போதெல்லாம் பாலருந்தும்
பூனையாக
மூடிக்கொள் கின்றன கண்கள்.
==========
உன் கருங் கூந்தலில்
சிவப்பு ரோஜா
இன்னும் நரைக்காத என்
நினைவுகள்!!

உன் அடையாளங்களை எல்லாம்
அழித்து விட்டேன்.
நினைவுகளை என்ன செய்வேன்!!

குடந்தை பரிபூரணன்
செல் 63845 38289

7094053241 indhrumail@gmail.com



அப்பாவெனும் அருமருந்து

சசிகலா திருமால்

தாயின் கருவறை போலவே
வாழ்நாள் முழுவதும் தாங்கிடும்
நின் தோள்களும்
அவ்வளவு புனிதமானது அப்பா..
நின் கரம் பிடித்து நடக்கையில்
உள்ளத்தின் அச்சங்கள் விலகிடும்
மாயம்தான் என்னவோ அப்பா..

நீயே வழிகாட்டியாய் இருந்ததால்
புத்தகத்தின் துணை
தேவையற்று போனது எனக்கு...
ஆம்.. உன் அனுபவமே
என் முன்மாதிரி அப்பா..
மரத்தை தாங்கிடும் வேரெனவே
அப்பாவின் அன்பும்
கண்ணிற்கு புலப்படுவதேயில்லை..

உலகமே எதிர்த்தாலும்
உறுதுணையாய் இருந்தவரே..
இதோ..
உந்தன் வியர்வை துளிகளில்
மணக்கிறது என் வாழ்வு...
அவமானங்கள் பல சுமந்து
தடைகள் பல கடந்து
குடும்பத்தை காத்திடும் தெய்வம்...
மொத்தத்தில்
அரிதாய் கிடைத்திட்ட
அன்பு பொக்கிஷம்
அப்பா...

ஹைக்கூ



பறவையின் கூட்டைப் பார்த்து
பொறாமைப் பட்டான் வாடகை
வீட்டில் வசிக்கும் மனிதன்!

பஞ்சதர்மா
வெள்ளாளப்பட்டி

இ ஆரம்பம்... இன்று ஈ இதழ் 7
www.indhru.in
7094053241 indhrumail@gmail.com

அப்பா கவிதைகள்



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி
செல். 9944284135

கடவுள் கொடுத்த வரம்
கிடைக்கவில்லை எனக்கு

கடவுளே கிடைத்தார் வரமாக
அவரே என் அப்பா

என் வாழ்க்கை எனும் தேரை
அழகாக செதுக்கிய
மூன்றெழுத்து கவிதை

அதுதான் என் தந்தை

அப்பா என்பது வெறும்
வார்த்தை அல்ல.

நம் வாழ்க்கை

உடல் சோர்வை அம்மா
வெளி காட்டுவது இல்லை

மனச்சோர்வை அப்பா
வெளி காட்டுவது இல்லை.

அப்பா..

குடிசையில் பிறந்த
குழந்தையை கோபுரத்தில்
ஏற்றிவிட துடிப்பவர் அப்பா...!

துள்ளிக்குதித்து விளையாடும்
பருவத்தில் அள்ளியணைத்து
பள்ளியில் சேர்த்தவர் அப்பா...!

கை வீசி நடக்கும் போது
கழுத்து மீதேற்றி
உலகைக் காண வைத்தவர்
அப்பா...!

பொய்ப் பேசி திரிந்த பொழுது
பொட்டில் அறைந்து-புத்தி
புகட்டியவர் அப்பா...!

என் பிள்ளைக்கு நான்
அப்பாவான பிறகுதான்
என் அப்பாவின்
பெருமை பல மடங்கு
உயர்ந்து நிற்கிறது
அவர் படத்திற்கு முன்..!



கவிச்செம்மல்'
இல.இரவி.
செ.புதூர்.612203.
அ.பேசி:9952113194

சிரிப்பு



எங்க வீட்டுக்காரர்
"துணியெடுக்க
"கூப்பிட்டா..நான்
போகமாட்டேன்.

ஏண்டி?

மாடியில் .."நான்
காயவைத்த
துணியைதான்"
எடுக்க கூப்பிடுவார்.

சுரேஷ், திருச்சிற்றம்பலம்

Free Advertisement

அழகர் பிரிண்டர்

ALAGAR Printers & Studio CELL: 9843018120

திருமண அழைப்பிதழ்
போட்டோ & வீடியோ
ஜிராக்ஸ்
ஆதார் கார்டு பிரிண்ட்
I.D கார்டு
கலர் ஜிராக்ஸ்
விசிட்டிங் கார்டு
விமான டிக்கெட்

URGENT DELIVERY DONE HERE

ஸ்டுடியோ ஜிராக்ஸ்



எப்படி படிப்பது என்ற குழப்பமா?
நீங்கள் TNPSC தேர்வுக்கு படிக்கிறீர்களா?
சிறந்த திட்டமிடல் கொண்ட புத்தகம்...

புத்தகம் 100.00
கூரியர் 50.00
மொத்தம் 150.00
G.Pay 7094053241



எழுத்தாளர் மலர்மதி அவர்கள் எழுதிய மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் 32 சிறுகதைகளின் தொகுப்பாக "இறைவனிடம் கையேந்துங்கள்" என்ற தலைப்பில் புஸ்தகா நிறுவனத்தார் வெளியிட்டு இருக்கிறார்கள். பிரபல எழுத்தாளர் ஆர்னிகா நாசர் அவர்களின் வாழ்த்துரையுடன் வெளிவந்துள்ள இப்புத்தகத்தின் விலை: ரூ. 180/-.
தொடர்புக்கு: 8667417874

கலர் கலர்
மொய் கவர்

20 கலர் கவர்கள் உங்கள் பெயர் ப்ரிண்ட் செய்து தரப்படும். கவர் தானாக ஒட்டிக்கொள்ளும் (Auto Paste) வசதியுடன் உள்ளது. வித்யாசமாக உங்கள் மொய் பணத்தை செலுத்தலாம்.

20 கவர்ஸ்
Rs.150 + Courier Rs.50 = Rs.200
G.Pay ... 7094053241 and
send your address in Whatsapp...







ஆரம்பம்...
இன்று எ இதழ்
www.indhru.in
7094053241 indhrumail@gmail.com

திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு.பெரியசாமி அவர்கள் தன் சொந்த கை வண்ணத்தில் பள்ளியை அழகுறச் செய்துள்ளார். அவரின் திறமைகளை வாழ்த்துவோம். அவர் செல் எண் 8489838488



இப்படி இருந்த கட்டிடத்தை





இப்படி வரைந்துள்ளார்.



ஆரம்பம்...
இனி ஈ இதழ்
www.indhru.in
10
7094053241 indhrumail@gmail.com

அப்பா

தியாகத்தின் மறுபெயர்
அப்பாவெனும் அப்பாவி
அன்றோ!
அவர்தம் தியாகம்
கடமையென மடைமாற்றம்
செய்யப்படுமன்றோ!
குழந்தைகளையும்
குடும்பத்தையும்
குதூகலத்துடன் சுமப்பவர்
அவரன்றோ!
குழந்தைகள் விரும்பி
கேட்டதை வாங்கி தரமுடியா
கையறு நிலையில்
தொட்டால் சிணுங்கி செடி
போல் அவர் முகம்
மாறிடுமே
தாம்பெற்ற பிள்ளைகளை
அவையத்து முந்தியிருக்க
செய்பவர் அவரன்றோ!
அவர்தம் பிள்ளைகளோ
இறக்கை முளைத்தும்
உழைத்து ஓடாய் தேய்ந்த
தந்தையை
முதியோர் இல்லத்தில்
சேர்ப்பதும் இறுதி சடங்கை
காணொளியில் கண்டு
அஞ்சலி செலுத்துவதும்
தவறன்றோ!
காலசுழற்சியில் நீயும்
ஒருநாள் அந்நிலை
அடைந்திடுவாய்
என்பதறிந்து செயல்படு
தனயனே.

நாஞ்சில் சு. நாகராஜன்
பறக்கை, கன்னியாகுமரி.
செல். 9486387026

அப்பா.

எத்தனை ஆணிகள்
அப்பாவின் செருப்பில்,
எனக்கு மட்டும் புதியதாய்!!

எண்ண அலைகள்.

அடிக்கடி கனவு தோன்றும்
ஆயிரம் எண்ணம் மோதும்
துடிக்கும் என் இதழ்கள்
சொல்ல
நாணமோ தடை விதிக்கும்
படிக்காதப் பாடம் ஒன்று
பன்முறை மனதில் தோன்றி
அடிக்கடி ஏதோ சொல்லி
அலையென நெஞ்சில் மோதும்.



குடந்தை
பரிபூரணன்
செல் 63845 38289

அப்பா

தோளில் சுமந்து
புது உலகம் காட்டிய
கூகுள்...

நம்.திரு.ரஅம்ஏச்.

அடுத்த இதழ்
தித்திக்கும் தீபாவளி
சிறப்பிதழ்

கதைகள்,
கவிதைகள்,
சிரிப்புகள்
துணுக்குகள்
மினி கதைகள்
பொன்மொழிகள்
புதிர்கள்
பொது அறிவு,
நாட்டு நடப்பு

என்று
அசத்தலாக
தயாராகி
வருகிறது...

உங்கள்
இதழுக்கு முந்த
வேண்டாம்..

நாங்களே
அனுப்பிவைப்போம்...

அறிவுக் கொழுந்து...





தமிழைக் கல்

நல் கவிதை எழுதத் தான்
எழும்பினேன்!
சொல் ஏதும் சிக்கவில்லை
அகத்தில்!
அருக்கனில் சோதியையும்,
அக்கத்தில் சுவையையும்,
விண்ணிலவில்
தண்மையையும்.
எரிதீயில் வெம்மையையும்,
வைத்த இறை;
என் மதியில்
சொல் அடுக்குகளை
சொருகிட மறந்தானோ?
மனம் வெதும்பி நின்றேன்!
மன்றீசன் சொல்லிட்டான்!
நல் ஆசானைத் தேர்ந்து
நற்றமிழை முறையாக
கற்பாயாக!
தானே கவிதை பொங்கி
எழும்புவதை காண்பாயாக!
கலங்காதே! கற்றுத்
தெளிவாய்!

சசிகலா விஸ்வநாதன்
Mob No 9900088027

இந்திய மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசம் போக்குவரத்துப் பதிவு எண்கள்

அருணாசலப் பிரதேசம் - AR
அசாம் - AS
ஆந்திரப் பிரதேசம் - AP
பீகார் - BR
சட்டீஸ்கர் - CG
கோவா - GA
குஜராத் - GJ
ஹரியானா - HR
இமாசலப் பிரதேசம் - HP
ஜார்க்கண்ட் - JH
ஜம்மு-காஷ்மீர் - JK
கர்நாடகம் - KA
கேரளம் - KL
மத்தியப் பிரதேசம்- MP
மகாராஷ்டிரம் - MH
மணிப்பூர் - MN
மேகாலயா - ML
மிசோரம் - MZ
நாகலாந் - NL
ஒரிசா - OR
பஞ்சாப் - PB
ராஜஸ்தான் - RJ
சிக்கிம் - SK
தமிழ்நாடு - TN
திரிபுரா - TR
உத்திரப் பிரதேசம் - UP
உத்தர்கண்ட் - UA/UK
மேற்கு வங்காளம் - WB
அந்தமான்-நிகோபார் - AN
சண்டிகர் - CH
டாமன்-டயூ - DD
டெல்லி - DL
இலட்சத் தீவுகள் - LD
பாண்டிச்சேரி - PY

@Tamilnadugovernmentexams

7094053241 indhrumail@gmail.com

அவர் போலி டாக்டர்னு
எப்படிச்
சொல்றே?

எனக்கு எவ்வளவு சுகர்
இருக்குன்னு
கேட்டதுக்கு நாலு டம்ளர் காபி
போடற
அளவுக்கு இருக்குன்னு
சொல்றாரே!

சி. ஆர். ஹரிஹரன்,
ஆலுவா, கேரளா.

இணையவழி மோசடிக்கு
பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

அப்பா

உமது
தியாகத்தையும்...
அன்பையும்...
பாசத்தையும்...
வானத்தாளில்
கடல் மை கொண்டு
எழுதினாலும்
வானமும் கடலும்-
இன்னும் வேண்டுமே!



கோவைக்கவி
புவனா

அப்பா



திருச்சிற்றம்பலம் சுரேஸ்
செல் 90921 42678

அப்பா
...
அப்பா..ஆகவேண்டும்
என்பதற்காக..
மனைவி என்ற
பெண்ணிற்கு கட்டினார் தாலி
தாலியை கட்டிவிட்டு
குடும்பத்துக்காக..
தினமும்
சம்பாதிக்கும் பணத்தை
எல்லாம்..
பால் கணக்கு தொடங்கி..
பள்ளிக்கூட கட்டணம் வரை
கட்டினார்.
.....

இந்த உலகில்..
எழுதாத சட்டம் என்றால்
அப்பாக்களுக்கு
மகள் என்ற பெண் குழந்தை
மிக..மிக..பிடிக்கும்.
அதனால்..தான்
தாய்..இடத்தில்
மகளை வைத்து பார்க்கிறார்கள்

.....

அப்பா...!
குடும்பத்தின்
பணம் காய்க்கும் மரம்.
கேட்கும் பொழுது எல்லாம்..
மனைவிக்கும் பிள்ளைக்கும்
கடன் பெற்றாவது
செலவு செய்யும்
உன்னத மனிதர்.
...

அப்பா..!
அப்பாவைப்பற்றி
அவனுக்குள் தவறான
எண்ணம் வரும்.
சிறுவயது தொடங்கி..
திருமணம் வரை.
அவனுக்கு அப்பா என்ற
பொறுப்பு
எவ்வளவு கடினம் என்று
அவன் அப்பா ஆனபின்
உணர்கிறான்
ஒவ்வொரு நாளும்.

தாயுமானவன்

.....

கி.சரஸ்வதி, ஈரோடு

இதயத்தில் கருப்பை
சுமக்கும் எளிய உயிரி

தோளில் பாரம்
தாங்கும் தூக்குத்
தூக்கி

ஒயாத உழைப்பைச்
சொல்லிக்காட்டத்
தெரியாத மௌனி

தனக்கென எதுவும்
வேண்டிக் கொள்ளத்
தெரியாத ஊமை
பக்தன்

மகனைத் தந்தையாகப்
பார்க்கும்
மனம் பெற்ற ஞானி

மகளெனில் அவள்
பாதம் தொடத்
தயங்காத பாச ஊற்று

தாயின் ஆண் வடிவம்
ஒப்பும் உயர்வும் அற்ற
பேரன்பினன்

அப்பாவை இப்படியும்
அழைக்கலாம்

தாயுமானவன்

வீட்டில் வீண் செய்த நேரத்தை, ரோட்டில் சரிசெய்ய நினைக்காதீர். சாலை விபத்துகளை தவிர்ப்போம்.🙏

அப்பா

அப்பா என்றால் அமைதி
அன்பின் அடையாளம்
பண்பின் இருப்பிடம்...
அப்பா என விளித்தால்
உடல் சிலிர்க்கும்
அப்பாவின் மடி...
அரசவையின் அரியணை
என் உயிரில் கலந்து
வழி காட்டும்
கலங்கரை விளக்கம் !



பி.ஆர்.கிரிஜா,
சென்னை

அப்பா

தந்தை ஒரு
விந்தையானவர்
வியர்வை விழ
உழைத்தாலும்
தன் பிள்ளை
நிழலில் வாழ
நினைப்பவர்.
தன்பசி மறந்தாலும்
பிள்ளை பசி
ஒருபோதும்
தாங்கமாட்டார்.
கடன் வாங்கியாவது
கடமை நிறைவேற்றும்
கண்ணியமிக்கவர்தான்
அன்புள்ள அப்பா!



கே.எஸ்.ரவிச்சந்திரன்
மணமேல்குடி.
செல் 70107 46996

புதிய ஆரம்பம்...
இன்று இந்து
www.indhru.in
14
7094053241 indhrumail@gmail.com

சின்னஞ்சிறு தகவல்கள்.



கற்றுக்கொள்ளுங்கள்

என்ன?	What?
எந்த?	Which?
யார்?	Who?
யாரை?	Whom?
யாருடைய?	Whose?
எப்படி?	How?
ஏன்?	Why?
எங்கே?	Where?
எப்பொழுது?	When?
எத்தனை?	How many?
எவ்வளவு?	How much?
எவ்வளவு நேரம்?	How long?
எவ்வளவு தூரம்?	How far?
எத்தனை வயது?	How old?
யாருக்கு?	To whom?
யாருக்காக?	For whom?
யாரைப் பற்றி?	About whom?
யாரால்?	By whom?
யாருடன்?	With whom?
எதற்காக?	For what?
எங்கிருந்து?	From where?
எப்போதிலிருந்து?	From when?
எந்த நேரத்தில்?	At what time?
என்ன காரணத்திற்காக?	For what reason?
எதை பற்றி?	About what?
எந்த அடிப்படையில்?	On what basis?

Instagram @Learnthespokenenglish



அப்பா!

அப்பாவின் மதிப்பு
மகன் அப்பாவாகும் போது தான்
தெரியும்!
அப்பா அவரின் பிள்ளைகள்
மூன்றோ
நான்கோ அத்தனைக்
குழந்தைகளுக்கும்
ஒரே மாதிரி தான்
நடத்துவார்!இந்த விவரம்
புரியாததால்
தான் பலருக்கு அப்பாவின்
மதிப்பு புரிவதில்லை !

பாரதிராஜன் என்கிற ரங்கராஜன்.
எஸ்.வி. சென்னை
அம்பத்தூரிலிருந்து.

என் கண்ணீரைத் துடைத்த...

மறைந்து போன-
என் தந்தையை நினைத்து
அழுது கொண்டிருந்தேன்!
கண்களிலிருந்து விழுந்த
கண்ணீர்த் துளிகள்
கன்னத்தில் வழிந்து,
என் கரங்களை
ஈரமாக்கிக் கொண்டிருந்தது!
திடீரென்று என்
கரங்களும், கன்னங்களும்
காய்ந்து போனது!
என் கரங்களால்
விழியோரம்
தொட்டுப் பார்த்தேன்!
அதில் ஒரு கரம்
பதிந்திருந்தது,
இறுக்கிப் பற்றிக் கொண்டேன்!
அந்தக் கரம்
வேறு யாருடையதும் இல்லை,
அது
என் தந்தையின் கரம் தான்!



பாரதி முத்து
வேலூர்

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
www.indhru.in
15
7094053241 indhrumail@gmail.com

கண்ணாடிப் பக்கம்



அப்பா கவிதை

என் உயிரின்
ஆணி வேர்
என் உணர்வின்
கண்ணாடி

என் அறிவின்
திறவுகோல்
என் அனுபவ
வழிகாட்டி

மொத்தத்தில்
எனது தந்தையின்
பிரதியே..நான்

கே.அசோகன் சென்னை

அன்புள்ள அப்பா

சிரித்துக் கொண்டே
சுமைகள் பல சுமந்தாய்
உன் ஆசைகளை எல்லாம்
ஆழ்மனதில் புதைத்தாய்
நாங்கள் முன்னேற நீ
சக்கரமாய் சுழன்றாய்
பசியையும் தூக்கத்தையும்
பலநாள் இழந்தாய்
ஓய்வே அறியாத நீ
காலனின் சதியால்
இன்று ஓய்வு
கொள்கிறாய் கல்லறையில்
இனி எப்போது காண்போமோ
அப்பா
உன்னை எங்கள்
விழித்திரையில் .

ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம் அஞ்சல்
கைப்பேசி -9600886441.

கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே...
யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...
அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர்
ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241



இன்று இதழை படித்ததற்கு நன்றி